**சேலம் மாநகராட்சி**
**மாண்புமிகு மேயர் அவர்களால் கொண்டுவரப்பட்ட அவசரத்தீர்மானம் நாள்.25.11.2022ன் உண்மைநகல்**

**முன்னாள் முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு திருவுருவச்சிலை அமைப்பது தொடர்பான தீர்மானம்**

பன்முகத் தன்மை கொண்டவர் கலைஞர். ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சர். தமிழ்நாட்டிற்கு, தமிழுக்கு செம்மொழி தந்தவர். காப்பியங்களுக்கெல்லாம் முன்னுரை தந்தவர். தனது 21–வது வயதில் சேலம் மாடர்ன் தியேட்டரில் மந்திரி குமாரி திரைப்படத்திற்கு முதன் முதலில் கதை வசனம் எழுதியவர்.

சேலத்திற்கு உருக்காலை, பெரியார் பல்கலைக்கழகம் கொண்டு வந்தவர். ஒருங்கிணைந்த நீதிமன்றம், உயர்தர சிகிச்சைக்கான மருத்துவமனை, ஒருங்கிணைந்த மாவட்ட ஆட்சியர் வளாகம் ஏற்படுத்தி, சேலத்திற்கு பெருமை சேர்த்தவர். இளம் வயதிலேயே திரைப்படத்திற்கு கதை, வசனம் எழுதி மக்கள் மனதில் நீங்கா இடம் பிடித்தவர். மேடை பேச்சில் வல்லவர். தோல்வியை அவர் சந்தித்தது இல்லை, எந்த தேர்தலிலும். அவர் சந்திக்காத தலைவர்கள் இல்லை இந்தியாவில். எந்த அச்சுருத்தலுக்கும் பணிந்தவர் அல்ல. உருவ சிலையை உடைத்த போது கூட தம்பி என் முதுகில் குத்தவில்லை, நெஞ்சில் தான் குத்தினான் என்று பெருமையுடன் கூறியவர்.

பெண்களுக்கு முதன் முதலில் இந்தியாவிலேயே சொத்தில் சம பங்கு உண்டு என சட்டம் இயற்றியவர். உடல் ஊனமுற்றோருக்கு மாற்றுத்திறனாளி என பெயர் சூட்டியவர். திருநங்கைகள் என்று பெயர் சூட்டி சமுதாயத்தில் அவர்களுக்கு அந்தஸ்து வழங்கியவர். சமத்துவபுரத்தை கொண்டு வந்து சமூக நீதி காத்தவர். விவசாய விலைப் பொருளுக்கு விலை நிர்ணயம் செய்யாத போது உழவர் சந்தை கொண்டு வந்தவர். உழுபவருக்கு மின் கட்டணமே வேண்டாம் என கூறி அவர்கள் வாழ்வில் ஒளி கொடுத்தவர்.

கருவுற்ற தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து வழங்கியவர். குழந்தைகள் வளர்ச்சிக்கும், அவர்கள் படிப்பிற்கும் உதவி செய்தவர். முதியோருக்கும் உதவியவர். மாநிலங்களில் முதலமைச்சர்கள் கோட்டையில் கொடி ஏற்றும் உரிமையை வாங்கி கொடுத்தவர். கேள்விகளுக்கெல்லாம் தயங்காமல், தடுமாறாமல் பதில் அளித்தவர். பகுத்தறிவு பாதையில் பயணம் செய்து வெற்றி பெற்றவர். அரசு நிகழ்ச்சிகளுக்கு முன் தமிழ்த்தாய் வாழ்த்து இசைக்க கூறி தமிழுக்கு பெருமை சேர்த்தவர். தன்னை விட்டு பலர் விலகிய போதும் தனித்து நின்று இயக்கத்தை காப்பாற்றியவர்.

இன்று உங்கள் முன் நின்று ஐந்து முறை முதலமைச்சராக இருந்து தமிழகத்தை தலைநிமிர வைத்த தமிழனத் தலைவர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு சேலம் மாநகராட்சி ஓமலூர் பிரதான சாலை அண்ணா பூங்கா வளாகத்தில் திருவுருவசிலை அமைக்க தீர்மானிக்கப்படுகிறது என்பதை மகிழ்ச்சியுடனும், பெருமையுடனும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஒம்) ஆ. இராமச்சந்திரன்
மேயர்
சேலம் மாநகராட்சி.

சேலம்–1.
25–11–2022.

தீர்மானம்: அனைத்து மாமன்ற உறுப்பினர்களின் ஒப்புதலுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

(ஒம்) ஆ. இராமச்சந்திரன்
மேயர்
சேலம் மாநகராட்சி.

சேலம்–1.
25–11–2022.